**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **157/2013** |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | வனிதா | CASTE | : | |
| W/O | தனிக்கொடி | RELIGION | : | இந்து |
| VILLAGE | அய்யனக்கவுண்டடன்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **45** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.02.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்குச்சொத்திற்கான வரியை எனது கணவர் செலுத்திவந்தார், ஆனால் யார் பெயரில் செலுத்தினார் என்று எனக்குத்தெரியாது. தற்போது வழக்குச்சொத்திற்கான அடங்கல் எனது மாமனார் பெயரில் உள்ளது. அது தாக்கல் செய்ய இயலுமா என்றால் எனக்குத்தெரியாது. 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது கணவரிடம் வழக்குச்சொத்தை கிரையம் கேட்டு அதை கிரையம் கொடுக்காததால் பிரதிவாதிகள் போலியாக பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அவ்வாறு பிரதிவாதிகள் போலி பத்திரம் போட்டதாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் எனது கணவர் புகார் கொடுத்தார்.

2. மேற்படி புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்குத்தெரியாது. வழக்கு சொத்து எனது கணவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. எனது கணவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் எந்த பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்திற்கான பத்திரம் கேரளா மாநிலம் பாரசாலாவில் பதியப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்குச்சொத்தை கிருஷ்ணன் என்பவரும் அவரது மகளும் எனது கணவருக்கு கிரையம் செய்தார்கள். கிருஷ்ணன் பெயரில் இருந்த வழக்குச்சொத்திற்கான பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் எனக்குத்தெரியாது. தற்போது எனது பெயருக்கு பட்டாவை மாற்றவில்லை. 1996 ல்

வழக்குச்சொத்தை கிரையம் பெற்று தற்போதுவரை எதற்காக பட்டா மாற்றம் செய்யாமல் இருக்கிறோம் என்றால் பத்திரத்தை பதிவு செய்யாததால் பட்டா மாற்றம் செய்யவில்லை.

4. 1ம் பிரதிவாதி பெயரில் பத்திரமும் வருவாய் ஆவணங்களும் உள்ளதால் என்னால் பட்டா மாற்றம் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை கிரையம் பெறும்முன் எனது கணவர் வில்லங்கம் உள்ளதா என்று பார்த்தார். மேற்படி வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.7 பத்திரத்தின்படி யார்யாருக்கிடையே பாகப்பிரிவினை நடந்தது என்று எனக்குத்தெரியாது. மேற்படி ஆவணத்தின்படி சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டது என்று எனக்குத்தெரியும்.

5. மேற்படி ஆவணத்தின்படி எந்த சர்வே எண்கள் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்குத்தெரியாது. மேற்படி ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்று எனக்குத்தெரியாது. மேற்படி ஆவணம் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டது என்று எனக்குத்தெரியாது. எதிர்வழக்குரை தாக்கல் செய்தபின்புதான் 3 வது பரிகாரம் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து அரசு ஆவணங்களின்படி 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றாலும் அவர்தான் அனுபவத்தில் உள்ளார் என்றாலும் அதை தெரிந்துகொண்டே இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6. எனது பெயரிலும் எனது கணவர் பெயரிலும் வழக்குச்சொத்திற்கான ஆவணம் இல்லை என்றாலும் வழக்குச்சொத்தின் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்குச்சொத்திற்கு சம்பந்தமில்லாதவை என்றாலும் அதனால் தான் எங்கள் பெயரில் பட்டா வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, செலவு தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.